செ.செ. எண்: 65

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
உதகமண்டலம்.
30.06.2020

## பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் அரசு செய்தி வெளியீடு நாள். 29.06.2020–ன் படி கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பொதுமக்களைக் பாதுகாக்கும் பொருட்டு, பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடன், தளர்வுகளுடன் தற்போது 30.06.2020 உடன் முடிவடைய உள்ள ஊரடங்கு உத்தரவானது 31.07.2020 நள்ளிரவு 12.00 மணி வரை தமிழகம் முழுவதும் மேலும் நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கிணங்க நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளும், தளர்வுகளும் 31.07.2020 நள்ளிரவு 12.00 மணி வரை கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

1. நகர்ப்புற பகுதிகளான பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் திறக்க அனுமதியில்லை. அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள் நடத்த அனுமதியில்லை.
2. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் நுழைய தடை விதிக்கப்படுகிறது. மேலும், தங்கும் வசதிகளுடன் கூடிய உணவகங்கள், ரிசார்ட்டுகள், காட்டேஜ்கள், திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள், கேளிக்கை கூடங்கள், மதுக்கூடங்கள், பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள் போன்ற பெரிய அளவில் மக்கள் கூடும் இடங்கள் செயல்பட அனுமதியில்லை.
3. பள்ளி, கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் அனைத்தும் செயல்பட அனுமதியில்லை.
4. மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்துக்கு தடை விதிக்கப்படுகிறது.
5. இதர மாவட்டங்களில் இருந்து பேருந்து போக்குவரத்து மற்றும் உள்ளூர் போக்குவரத்துகள் 15.07.2020 வரை தடை செய்யப்படுகிறது.
6. 05.07.2020, 12.07.2020, 19.07.2020 மற்றும் 26.07.2020 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் எவ்விதத் தளர்வும் இன்றி முழு ஊரடங்கு அமல்படுத்தப்படுகிறது.
7. நீலகிரி மாவட்டத்திற்குள் பயணம் மேற்கொள்ள இ–பாஸ் இல்லாமல் செல்ல அனுமதிக்கப்படுகிறது. வெளி மாநிலம் , வெளி மாவட்டங்களுக்கு சென்று வர கட்டாயம் இ–பாஸ் இருந்தால் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்க முடியும்.

மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், பொதுமக்கள் இதுநாள் வரை முழு ஒத்துழைப்பு நல்கி வந்துள்ளீர்கள். இதனைத் தொடர்ந்து மேலும், இதே போன்று முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.

30/6/2020

Scanned with CamScanner